# போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

## III-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

## SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE.

APRIL 11, 1922.

ந. 7(1).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலே, 1922-ம்ஸு எப்ரல்மீ 11உ. [விலே, 3 பை.

# இந்தியா கவர்ன்மெண்ட் மசோதா ஆக்ட்.

# BILL OF THE GOVERNMENT OF INDIA.

இராஜாங்க சபையிலும் சட்டநிருபண சங்கத்திலும் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டுகளும், ஷை சபைக்கும் சங்கத்துக்கும் அனுப்பப்பட்ட ஸெலெக்ட் கம்மிட்டியாரின் ரிபோர்ட்டுகளும், இந்திய சட்டநிருபண விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி பிரசுரிக்கப்பட்ட மசோதா ஆக்டுகளும்.

---

இந்தியா கவர்ன்மெண்ட்.

சட்டநிருபண இலாகா.

அடியிற்கண்ட மசோதா ஆக்டானது - 1922-ம்ஸு ஜனவரிமீ 31உ சட்ட நிருபண சங்கத்தில் கொண்டுவரப்பட்டது :—

No. 6 of 1922.

1922-ம்ஸுத்து 6-ம் ஷ.

## A BILL FURTHER TO AMEND THE CODE OF CRIMINAL PROCEDURE, 1898.

## 1898-ம்ஸுத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்றவிசாரணைச் சட்டத்தைப் பின்னும் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

க்ரிமினல் கோர்ட்டுகளில் லாயர்களாக நியாயவாதம் செய்கிறவர்களாய் முக்தியார் என்னும் பெயர் வழங்கும் நபர்களுக்கு சட்டசம்மதமான அந்தஸ்து ஏற்படுத்துவதும், அது காரியத்துக்காக 1898-ம்ஸுத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்றவிசாரணைச் சட்டத்தைப் பின்னும் திருத்துவதும் யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

1898-ம்ஸுத்து 5-வது ஆக்ட்.

சுருக்கமான பெயரும் வியாபகமும்.

1. (1) இந்த ஆக்டை, க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடைக் குறித்த (திருத்துவதற்கான) 192 -ம்ஸுத்து ஆக்டென்று சொல்லலாம்.

(2) இது - ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கும்.

1898-ம்ஸுத்து 5-வது ஆக்ட்.

1898-ம்ஸுத்து 5-வது ஆக்ட் 4-வது பிரிவில் திருத்தம்.

2. 1898-ம்ஸுத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் 4-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (r) அடையாளமிட்ட பகுதியில், "அட்டர்ணி என்பதும்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "யாதொரு முக்தியார் என்பதும்" என்னும் வார்த்தைகளையும், 'யாதொரு முக்தியார் முதலிய" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "வேறேயாதொரு" என்னும் வார்த்தைகளையும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

## இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

க்ரிமினல் கோர்ட்டுகளில் நியாயவாதம் செய்கிறவர்களாய் முக்தியார் என்னும் பெயர் வழங்கும் நபர்கள்-இது காரியத்துக்காக ஹைகோர்ட்டுகளின் ஆதரவில் நடத்தப்படும் ஒரு பரீக்ஷையில் கிரமமாய்த் தேறின பிறகு ஹைகோர்ட்டுகளிடமிருந்து கிடைக்கும் லைஸென்ஸின்படி நியாயவாதம் செய்கிறார்கள். க்ரிமினல் கோர்ட்டுகளில் அவர்கள் அங்கீகாரம் பெற்ற நியாயவாதிகளாகவும் இருக்கிறார்கள். சாதாரணமாய்ச் சகல காரியங்களுக்காகவும் அவர்கள் அங்கீகாரமான நியாவாதிகளாகக் கருதப்படுகிறார்கள். இப்போதிருக்கிற சட்டப்படி, முக்தியார்கள் தங்களுடைய கட்சிக்காரர்களுக்காகப் பிரவர்த்திக்க கோர்ட்டுகளிலிருந்து அனுமதி பெற்றிருக்கிறார்கள். வாஸ்தவத்தில் இந்த அனுமதியானது சாதாரணமாயும் பொதுவாயும் கொடுக்கப்படுகிறது. ஏதோ சில விஷயங்களில் மாத்திரமே அது கொடுக்கப்படவில்லை. முக்கியமாக, இந்த நியாயவாதிகள் எவ்வித பயிற்சி அல்லது லைஸென்ஸுமில்லாத சாதாரண நபர்களின் வகுப்பிலேயே சேர்க்கப்பட்டிருக்கிறபடியால், அவர்களுக்கு இது விஷயமாய் மனக்குறை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறையின் காரணமாக அதிருப்தி அதிகமாய் உண்டாயிருக்கிறது. ஆகவே, அதை நிவர்த்திப்பது உசிதமாகும். இந்தப்படி செய்வதனால், எந்த வகுப்பைச் சேர்ந்த லாயர்களின் கௌரவம் அல்லது அந்தஸ்துக்கும் பாதகம் ஏற்படவுமாட்டாது, நியாயம் சரியாய் நடந்தேறுவதற்கு எவ்விதத்திலும் பாதகம் உண்டாகவுமாட்டாது. முக்தியார்கள் கூடுமானமட்டில் தகுதியாயிருக்கும் ஒரு பரீக்ஷையில் தேறவேண்டியிருக்கிறபடியாலும், தங்களுடைய லைஸென்ஸுகளைப் பிரதிவருஷமும் புதுப்பித்துக்கொள்ள வேண்டியிருக்கிறபடியாலும், அந்தப்படி புதுப்பிக்கும் விஷயமானது தொழில் சம்பந்தப்பட்டமட்டில் அவர்கள் நன்னடத்தையுள்ளவர்களாயிருப்பதைப் பொருத்ததாயிருக்கிறபடியாலும், அவர்களுக்குத் தற்காலம் ஏற்பட்டிருக்கும் குறையை அப்படியே விட்டு வைத்திருப்பது அனுவசியமாகும்.

2-வது பகுதியினால் மேலே குறிப்பிடப்பட்ட குறைகள் நிவர்த்தியாகின்றன.

அபுல் காஸெம்.

1921-ம் வருஷம் ஆகஸ்ட்மீ 23௳.

---

எச். மான்க்ரீப் ஸ்மித்,
இந்தியா கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.